
திருக்கொடுங்குன்ற [illegible]

தல வரலாறு



பிரான்மலை வகையரு

ஐந்துகோவில் தேவாலயம்

குன்றக்குடி

திருக்கொடுங்குன்றமெனும் பிரான்மலைத் தல வரலாறு

பிரான்மலை வகையரு

ஐந்துகோவில் தேவாலயம்

குன்றக்குடி

பரிணமலத் தலைவரலாறு
முதற்பதிப்பு; ஜுலை 62

விலை 10 காசு

★

அச்சிட்டோர்:
அடிகளார் அச்சகம்
குன்றக்குடி

பதிப்புரை

ஒரு பொருளைப்பற்றிய சிறப்பை நாம் அறிந்தால் தான் அப்பொருளை அணுகும்போது தக்கசிறப்பளித்துப் போற்றும் இயல்பு நம்மிடம் உண்டாகும். பொருளின் தன்மையறியாச் சிறு குழந்தையிடம் வைரமோ மாணிக்கமே அகப்பட்டபோதிலும் கூட அது தன் அறியாமையால் அப்பொருளை அழிக்கவோ தன்னையே அழித்துக் கொள்ளவோ கூடும். எனவே பொருளறிவு அப்பொருளைக் கையாள் பவனுக்குத் தேவை—இன்றியமையாததாகும்.

அதுபோல ஒரு ஊரின் வரலாறும் தொன்மையும் சிறப்பும் அவ்வூர்க்கண் எழுந்தருளியுள்ள இறையின் சிறப்பும் அறிந்து கொள்வது அவ்வூர்க்கு அவ்வூர்க் கோவிலுக்குச் செல்பவருக்கு இன்றியமையாததாகும். பிரான்மலை என்று இன்று வழங்கும் திருக்கொடுங் குன்றத்தின் வரலாற்றுச் சிறப்பும், திருக்கொடுங் குன்றீசர் அருளின் சிறப்பியல்பும்; மேலும் உள்ளபல எல்லாச்சிறப்புக்களையும் ஊர்க்கு—கோவிலுக்குவரும் பெருமக்கள் அறிந்து கொள்ள ஓரளவு துணைசெய்யுமென்ற நோக்கத்துடன் இந் நூல் வெளியிடப் பெறுகின்றது.

அன்பர்கள்படித்து மகிழ்ந்து பாடிப்பரவிகொடுங் குன்றீசனருளையும் அம்மையின் கடைக்கண் நோக்கும் பெற்றுய்வார்களாக

பதிப்பாசிரியர்.

இஃது

இவ்வாலய பரம்பரை தருமகர்த்தா

45வது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி

அருணாசலதேசிக பரமாசாரிய சுவாமி அவர்களின்

திருவுளக்குறிப்பின் வண்ணம்

வெளியிடப்பெற்றது.

வரலாற்றில்...

தென்னகமெங்கும் தண்ணொளிபரப்பி, சைவ செந்நெறியின் சீர்மைகளை நாட்டுள்ள மக்களெலாம் நன்குமனத்திருத்த நல்லபல தொண்டாற்றும் ஆதீனங்களுள் தொன்மையும் சிறப்பும் வாய்ந்துவிளங்குவது குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனமாகும். இவ்வாதீனத்திற்குரியனவாக ஐந்துகோவில்கள் முறையே குன்றக்குடி, திருப்புத்தூர், சதுர்வேதமங்கலம், பிரான்மலை, திருக்கோளக்குடி ஆகியவிடங்களில் அழகுறஅமைந்து அருள்பரப்பி வருகின்றன. இன்றைய குருமகா சந்நிதானமாகிய தெய்வத்திரு தெய்வசிகாமணி அருணாசலதேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் திருவருட்பாலிப்பின்கீழ் இவ்வாலயங்கள் திருப்பணி செய்யப்பெற்றுத் திருவுடன் விளங்குகின்றன.

வரலாற்றுப் பேராற்றின் ஓட்டத்தில் வளமார் பண்டைப் பெருநகரங்கள் சிக்கிச்சிதைந்து உருமாறி விடுவதும்; மீண்டும் பெருஞ்சிறப்புப் பெற்றிலங்குவதும் மறுக்கமுடியாத — ஒப்புக்கொள்ளத்தக்க உண்மையாகும். பிரான்மலை என்று இன்று வழங்கும் மலையும் அதன் சுற்றுப் புறங்களும் தமிழக வரலாற்றுடன் சேர்ந்து பிணைந்து சிறு'டன் அன்று விளங்கிய ஓர் பகுதியாகும். அம்மலையும் அதன் சுற்றுப்புறங்களும் பறம்புமலை,பறம்புநாடு என்று வழங்கப்பெற்றன பறம்புமலையும் தன் பறம்புநாடும் வரலாற்றில்

இடம்பெறுதற்குக் காரணமாக இருந்தவன் பாரி எனும் வள்ளலாவான். தன்னை அடைந்தோர்க்குத் தாயினும் இனியனாகத் தண்ணளி செய்து தக்காங்கு பரிசில்பல நல்கி நயந்து நின்றவன் அவன். கொடையிலே அவனுக்கிணையான மன்னர்களோ செல்வர்களோ அவன் காலத்தில் இல்லை. ஈடும் எடுப்புமற்றவனாயினும்—அவனுக்கு நிகர் அவனாகவே விளங்கி நின்றானாயினும் அவனுக்கு ஒப்பாகச் சொல்லத்தக்க அஃறிணைப் பொருளும் ஒன்று உண்டு என்கிறார் கபிலர் என்னும் புலவர். அதுதான் மாரி! உலகைப்புரப்பதிலும் பயன் கருதாது பயன் தந்து வாழவைப்பதிலும் பாரிக்கு நிகர் மாரியே என்கிறார் அப்புலவர். தன்னிடத்து வந்துநின்ற பரிசிலர்க்குத் தனக்குரியதாகப் பெற்றிருந்த 300 ஊர்களையும் பரிசிலாகத் தந்து விட்டான் அப்பறம்பிற்கோமான் என்றால் அவன் கொடைச் சிறப்பை எடுத்தியம்புவது இயலாது; அது உய்த்துணர்ந்து உவகை கொள்ள வேண்டியதாகும்.

2 தலத்தின் திருப்பெயர்கள்

பாரியின் காலத்தில் சீரும் சிறப்பும், ஏரும் ஏற்றமும், வளமும் வண்மையும் பெற்று நின்ற திருநகரே இன்றையபிரான்மலை. இதற்குக்கடோரகிரி என்றும் பிரசண்டகிரி என்றும் திருக்கொடுங்குன்றமென்றும் பெயர்கள் பலஉள்ளன.

3 இடமும் சிறப்பும்

அங்கு எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கும் ஆண்டவன் திருக்கொடுங்குன்றநாதர் என்ற காரணப்பெயருடையார். அம்மை குயிலமுத

நாயகி என்னும் திருப்பெயருடன் கருணை வடிவமாகக் காட்சி தருகின்றார். இவ்வூர் இராமநாதபுர மாவட்டத்தில் திருப்புத்தூரிலிருந்து திண்டுக்கல் செல்லும் பெருவழியிலுள்ள சதுர்வேதமங்கலத்திலிருந்து 5கல் தொலைவில் உள்ளது. ஆயினும் "ஈண்டு நின்றார்க்கும் தோன்றும் சிறுவரை சென்று நின்றார்க்கும் தோன்றுமென்று" கபிலர் பாடியவாறுபோல நெடுந்தொலையிலுள்ளோர்க்கும் காட்சி அளிக்கும் மாட்சியும் உயரமும் கொண்டு விளங்குகின்றதிம்மலை! இம்மலையின்கண் எழுந்தருளியுள்ள இறைவனைத் திருஞானசம்பந்தர் பாடிப்பரவிப் புகழ்ந்துள்ளார்; அருணகிரிநாதர் தம் சந்தத்திருப்புகழில் வைத்து அகமகிழ்ந்து பாடுகின்றார். இம்மலையைத் தலைநகரமாகக்கொண்ட கொடைவள்ளல்பாரி 'கொடுக்கிறலாரனைப் பாரியே என்றுபேசினும் கொடுப்பாரிலை' என்று திருமுறைகளாலும் சங்கப் புலவர்களாலும் போற்றிப் புகழ்ந்துரைக்கப்பெற்ற பெருஞ்சிறப்பினன். ஆகவே மலையும்; மலைக்கண் வீற்றிருந்தருளும் இறையும்; மலையை ஆண்ட மாண்பார் மன்னனும் வரலாற்றில் பெற்றுள்ள இடம் குறிப்பிடத்தக்கதாகும்.

இங்கெழுந்தருளியுள்ள இறைவனைப் பற்றியதும் இம்மலையைப் பற்றியதுமான புராண வரலாறும் உண்டு. பிர்மாண்ட புராணமென்னும் புராணம் இவற்றைப் பதினெட்டு அத்தியாயங்களில் தெளிவாக அழகுற விளக்கிக் கூறுகின்றது. இங்குவந்திருந்து பெரும்புலர்காலையில் புண்ணியம்

பெருகு *தீர்த்தங்களில் மூழ்கி எழுந்து "பித்தர்க்குப் பத்தராகி அரும்பொடு மலர்கள் கொண்டு ஆங்கு ஆர்வத்தை உள்ளேவைத்து விரும்பி நல்விளக்குத்தூபம் விதியினுல் இட்டு" வேண்டிய வரங்கள் பெற்றும்; சாபவிமோசனம் பெற்றும், பாவங்கழிந்து நின்றும் பலன் பெற்றவர் அநேகராவர்.

4 திருக்கோயில்

"பூவில் வாசத்தைப் பொன்னினை மணியைப் புவியைக் காற்றைப் புனல் அனல் வெளியைப்" படைத்து, விறகில்தீயினனுய், பாலிற்படு நெய்யினனுய் மறைந்துநின்று பக்குவ ஆன்மாக்களுக்கு அருளும் ஒப்பிலா இறைவன் திருக்கொடுங்குன்றீசனுக மலை அடிவாரத்தில் காட்சி தருகின்ருன். அருளின் திருவாய அம்மை அடியவர்க்களும் பெருநோக்குடையளாய், புன்முறுவல்பூத்த திருமுகமும்; "அறங்கிடந்த நெஞ்சும் அருள் ஒழுகு கண்ணும்" கொண்டு நின்று திருவருள் பாலிக்கின்ருள். "அம்பலக் கூத்தாடும் இறைவனைஎண்ணிஅபமிகை ஆற்றிய பெருந்தவக் கனலே தவமுடிவில் ஒளிவடிவாய உக்கிர இலிங்கமாய் உருவெடுத்து நின்று உளங்கனிந்து ஓதி வழிபடும் உண்மையன்பர்க்கு ஓவிலாதருள் பாலிக்கின்ருன்" என்று பிர்மாண்ட புராணத்தின் இரண்டாம் பகுதியாகிய உக்கிரலிங்கஉற்பத்தி கூறுகின்றது,

12பக்கங்களிற் காண்க.

5 பைரவர் கோயில்

இறைவன் திருக்கோயிலுக்குமேலே, மலையின் நடுப்பகுதியில் அமைந்த கோயில் பைரவர் திருக்கோயிலாகும். இக்கோயிலுள் எழுந்தருளியுள்ள பைரவர் உக்கிரம் வாய்ந்தவர். இவர் இறைவனது ஆணையைத் தலைமேற்றாங்கி ஆணையை நிறைவேற்றி இங்கு எழுந்தருளியுள்ளார் என்பது ஐதீகம்.

6 புராணவரலாறு அ. மலையின் தோற்றம்

முன்னொருகாலத்தில் ஆதிசேடனுக்கும் வாயுவிற்கும் பெரும் போட்டி ஏற்பட்டது, யார்பெரியவன் என்று நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும் என்று இருவரும் போட்டியிட்டனர். சேடன் மாமேருமலையின் கொடுமுடிகளைப் பாதுகாப்பதென்றும் வாயு, சேடனது காப்பிலிருந்து கொடுமுடிகளை விடுவிப்பதென்றும் முடிவு செய்தனர். சேடன்காக்க, வாயு பெயர்க்க முயல, தேவர்களும் முனிவர்களும் யாதுநேருமோஎன்று அஞ்சினர். பிரமனிடம் முறையிட்டனர். பிரமனும் தேவர்களும் வேண்டிக்கொண்டதற்கிணங்க சேடன் தன் பிடியைத் தளர்த்தவே வாயு கொடுமுடிகளைப் பெயர்த்தெடுத்துச் சென்றான். அவன் கொண்டு சென்றகொடுமுடிகளிற்சில ஆங்காங்கே சிதறின. எஞ்சிநின்ற இக்கொடுமுடியை எடுத்துச் செல்ல இயலாது வானவீதியிலிருந்தவாறே விட்டுவிட அது இலிங்க உருவத்துடன் இங்கு வந்து அமைந்தது. வாயுவால் எடுத்துவரப் பெற்றமையின் இது பிரசண்ட கிரி என்னும் பெயர்பெற்றது.

ஆ. பைரவர்வருகை

இப்பிரசண்டகிரியின் உயரத்தின் காரணமாகப் பகலவன் செலவு தடைப்பட்டது. தேவரும் மூவரும் வேண்ட இறைவன் பைரவரை அனுப்பித் தடைநீக்க ஆணையிட்டான். இறைவனது ஆணையின்வண்ணம் சூலமேந்திவந்து சூலத்தால் மலையைப்பிளந்து தடைநீக்கி இவ்விடத்திலேயே எழுந்தருளினர். இங்ஙனம் வீரமும் தீரமும் நிறைந்து நின்ற பைரவர் நாளும் அடியவர்களுக்கருளுகின்ருர்.

(பிர்மாண்ட புராணம் 11-வது அத்தியாயம்)

7 திருப்பணிகள்

தெய்வஒளிவீசும் இத்திருக்கோயிலுக்கு வரும் அடியார் அனைவரும் தட்டித்தடுமாருது சென்று இறைவனை வணங்கவேண்டும் என்ற சீரியகருத்துடன் தவத்திரு குருமகாசந்நிதானம் அவர்கள் 1956ல் மின்விளக்கு வசதியினை ஏற்படுத்தி அருளினுர்கள்.

மின்னெளியும் மின்னுர் செஞ்சடை வேதியன் தண்ணெளியும் நிறைந்த இக்கோயிலைத் தவத்திரு குருமகா சந்நிதானம் அவர்கள் 1954, 1957 ஆகிய ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான வெண் பொற்காசுகள் செலவு செய்து பொலிவுடையதாகப் புதுப்பித்தருளினுர்கள்.

பைரவசுவாமி கோவில் நுழைவாயிலில் இன்று குன்றக்குடி திருவண்ணுமலை ஆதீனத்தில் அருட்செங்கோல் ஓச்சிவரும் குருமகாசந்நிதான

மாகிய தவப்பெருந்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் (குன்றக்குடி அடிகளார்) நிறுவியுள்ள திருக்கொடுங் குன்றத் தேவாரப்பதிகங்கள் சலவைக்கற்களில் பொலிவுடன் விளங்கி, வருவோர் கண்களையும் கருத்தையும் ஈர்த்து இறைவனிடம் பேரன்பு பூண்டொழுகச் செய்கின்றன. இத்திருப்பதிகங்களை முன்னாள் அறநிலையப் பாதுகாப்பு ஆணையர் உயர்திரு உத்தண்டராமபிள்ளை அவர்கள் திறந்துவைத்தார்கள். விரைவில் அருணகிரி நாதர் பாடியருளிய திருக்கொடுங் குன்றத் திருப்புகழ்ப் பாக்களையும் சலவைக் கற்களில் பொறித்துத் தரதிட்டமிட்டுள்ளார்கள்,

தம் நிர்வாகத்தின் கீழ் உள்ள கோயில்கள் வளர்ச்சிக்கான திட்டங்கள்பலதீட்டிச் செயற்படுத்தும் குருமகா சந்நிதானம் அவர்கள். மேலும் இக்கோயில் வளர்ச்சிக்கான பல திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்த உள்ளார்சள்.

8. தீர்த்தங்கள்

1	முக்தா தீர்த்தம்	8	பிரும ,,
2	வித்ரும ,,	9	க்ஷீர ,,
3	ி்து புஷ்கரணி	10	லக்குமண ,,
4	சித்த பைரவ ,,	11	அநுமத் ,,
5	பிஞக என்ற திரிசூல ,,	12	காக ,,
6	குக ,,	13	வாடுக ,,
7	வன்னி ,,	14	க்ஷேத்திர பால ,,

சப்தமாத்ருகண	,,	37	துர்வாச	,,
சப்தரிஷி	,,	38	தாரக	,,
பைரவ	,,	36	சௌனக	,,
ஆதித்ய	,,	40	இராம	,,
சரசுவதி	,,	41	இமய	,,
சாவித்திரி	,,	42	இராக்ஷச	,,
காயத்திரி	,,	43	வாருண	,,
சந்திர	,,	44	வாயு	,,
விஷ்ணு	,,	45	ருத்திர	,,
தர்ம	,,	46	மன்மத	,,
கௌபோ	,,	47	லட்சுமி	,,
துர்க்கா	,,	48	அகஸ்திய	,,
காளி	,,	49	சண்டராஜ	,,
வியாக்ரபாத	,,	50	வஜ்ஜிர	,,
இந்திர	,,	51	பாண	,,
குரு	,,	52	இராவண	,,
முனி	,,	53	பைசாச ப்ரமண	,,
கஞுசா	,,	54	தண்ட நீச மகா	,,
நந்தி	,,	55	சூர்ய புஷ்கரணி	,,
பானு	,,	56	சிவ	,,
வாசிஷ்ட	,,	57	சித்தமகா	,,
கௌதம	,,			

9. கடுந்தவம் புரிந்தோரும், சாப விமோசனம் பெற்றோரும்:-

1 அம்பாள்
2 சுப்பிரமணியர்
3 நந்தி
4 பிர்மா
5 சரசுவதி
6 உபமன்யு

இத்தகைய சீரும் சிறப்பும் பீடும்பெருமையும் ஏற்றமும் எழிலும் வாய்ந்த கொடுங்குன்றீசனை வழிபட்டு வாழ்வும் வளமும்; செல்வமும் சீரும், இன்பமும் ஏற்றமும் பெற்றுய் வோமாக.

திருச்சிற்றம்பலம்

12. பறம்புமலைபற்றிய சங்கநூற்குறிப்புக்கள்.

தடவுவாய்க் கலித்த மா இதழ்க் குவளை
வண்டுபடு புதுமலர்த் தண்சிதர் கலாவப்
பெய்யினும் பெய்யா தாயினும் அருவி
கொள்ளுழு வியன்புலத் துழைகா லாக
மால்புடை நெடுவரைக் கோடுதோ றிழிதரும்
நீர்............... (புறம்105)

உழவர் உழாதன நான்கு பயனுடைத்தே
ஒன்றே சிறியிலை வெதிரின்நெல்விளை யும்மே
இரண்டே தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே
மூன்றே கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே
நான்கே அணிநிற ஓரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே
வான்கண் அற்றவன்மலையே வானத்து
மீன்கண் அற்றதன் சுனையே......... (புறம் 109)

முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னாடு (புறம் 110)

கோழல் செம்மையிற் சான்றோர் பல்கிப்
பெயல்பிழைத் தறியாப் புன்புலத் ததுவே (புறம்117)

ஊருடன் இரவலர்க் கருளித் தேருடன்
முல்லைக் கீத்த செல்லா நல்லிசைப்
சடுமணி யானைப் பறம்பிற் கோமான்
பாரி......... (புறம்201)

உ

கொடுங்குன்றம் என்ற பிரான்மலை

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

பண்—நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

வானிற் பொலி வெய்தும்மழை மேகங்கிழித் தோடிக்
கூனற் பிறை சேருங்குளிர் சாரற்கொடுங் குன்றம்
ஆனிற் பொலி வைந்தும்மமர்ந் தாடி யுல கேத்தத்
தேனிற் பொலி மொழியாளொடு மேயான்றிரு நகரே. (1)

மயில்புல்குதண் பெடையோடுடன் ஆடும்வளர் சாரற்
குயிலின்னிசை பாடுங்குளிர் சோலைக்கொடுங் குன்ற
மயில்வேன்மலி நெடுவெஞ்சுட ரனலேந்திநின் றூடி
யெயின்முன்பட வெய்தானவன் மேயவ்வெழி னகரே. (2)

மிளிரும் மணி பைம்பொன்னொடு விரைமாமல ருந்திக்
குளிரும்புனல் பாயுங்குளிர் சாரற்கொடுங் குன்றங்
கிளர்கங்கையொ டிளவெண்மதி கெழுவுஞ்சடை தன்மேல்
வளர்கொன்றையு மதமத்தமும் வைத்தான்வள நகரே. (3)

பருமாமத கரியோடரி யிழியும்விரி சாரற்
குருமாமணி பொன்னோடிழி யருவிக்கொடுங் குன்றம்
பொருமாவெயில் வரைவிற்றரு கணையிற்பொடி செய்த
பெருமானவன் உமையாளொடு மேவும்பெரு நகரே. (4)

மேகத்திடி குரல்வந்தெழ வெருவிவ்வரை யிழியுஞ்
சூகைக்குல மோடித்திரி சாரற்கொடுங் குன்றந்
நாகத்தொடு மிளவெண்பிறை சூடிந்நல மங்கை
பாகத்தவ னிமையோர்தொழ மேவும்பழ நகரே. (5)

கைம்மாமத கரியின்னின மிடியின்குர லதிரக்
கொய்ம்மாமலர்ச் சோலைபுக மண்டுங்கொடுங் குன்றம்
அம்மானென வுள்கித்தொழு வார்கட்கருள் செய்யும்
பெம்மானவ னிமையோர்தொழ மேவும்பெரு நகரே. (6)

மரவத்தொடு மணமாதவி மௌவல்லது விண்ட
குரவத்தொடு விரவும் பொழில் சூழ்தண்கொடுங் குன்றம்
அரவத்தொடு மிளவெண்பிறை விரவும்மலர்க் கொன்றை
நிரவச்சடை முடிமேலுடன் வைத்தானெடு நகரே. (7)

முட்டாமுது கரியின்னின முதுவேய்களை முனிந்து
குட்டாச்சினை யவைமண்டிநின் றுடுங்கொடுங் குன்றம்
ஒட்டாவரக் கன்றன்முடி யொருபஃதவை யுடனே
பிட்டானவ னுமையாளொடு மேவும்பெரு நகரே. (8)

அறையும்மரி குரலோசையை யஞ்சியடு மானை
குறையும்மன மாகிம்முழை வைகுங்கொடுங் குன்ற
மறையும்மவை யுடையானென நெடியானென விவர்க
ளிறையும்மறி வொண்ணுதவன் மேயவெழி நகரே. (9)

மத்தக்களி ருளிவ்வர வஞ்சிம்மலை தன்னைக்
குத்திப்பெரு முழைதன்னிடை வைகுங்கொடுங் குன்றம்
புத்தரொடு பொல்லாமனச் சமணர்புறங் கூறப்
பத்தர்க்கருள் செய்தானவன் மேயபழ நகரே. (10)

கூனற்பிறை சடைமேன் மிக வுடையான்கொடுங் குன்றை
கானற்கழு மலமாநகர்த் தலைவன்னல கவுணி
ஞானத்துயர் சம்பந்தன நலங்கொடமிழ் வல்லா
ரூனத்தொடு துயர்தீர்ந்துல கேத்துமெழி லோரே. (11)

திருச்சிற்றம்பலம்

திருப்புகழ்

அனங்க னம்பொன் றஞ்சுந் தங்குங் கண்களாலே
அடர்ந்தெ ழும்பொன் குன்றங் கும்பங் கொங்கையாலே
முனிந்து மன்றங் கண்டுந் தண்டும் பெண்களாலே
முடங்குமென்றன் றொண்டுங் கண்டின் றின்புறுதோ
தெனந்தெ னந்தென் தெந்தெந் தெந்தெந் தெந்தனுன
செறிந்த டர்ந்துஞ் சென்றும் பண்பின் தும்பிபாடக்
குனிந்தி லங்குங் கொம்புங் கொந்துந் துன்றுசோலைக்
கொழுங்கொ டுந்திண் குன்றந்தங்குந் தம்பிரானே.

எதிர்பொருது கவிகடின
கச்சுக்க ளும்பொருது குத்தித்தி றந்தமலை
இவைகளென வதிம்ருகம
தப்பட்டு நின்றுழுகி முத்துச்செ றிந்தவட
மெனுநிகள மவையறவு
தைத்திட்டணைந்துகிரி னிற்கொத்து மங்குசநெ ருங்குபாகர்

எதிர்பரவ உரமிசைது
கைத்துக்கி டந்துடல்ப தைக்கக்க டிந்துமிக
இரதிபதி மணிரவுலி
எற்றித்ரி யம்பகனு முட்கத்தி ரண்டிளகி
இளைஞருயிர் கவளமென
மட்டித்த சைந்தெதிர்பு டைத்துச்சி னந்துபொரு
கொங்கையானை

பொதுவில்விலை இடுமகளிர்
பத்மக்க ரந்தழுவி ஒக்கத்து வண்டமளி
புகலிணைய வரிபரவு
நச்சுக்க ருங்கயல்கள் செக்கச்சி வந்தமுது
பொதியுமொழி பதறவள
கக்கற்றை யுங்குலைய முக்கத் துடன்கருணை தந்து...

புதுமைதரு கலவிவலை
யிற்பட்ட பூந்தியுயிர் தட்டுப்ப ருந்திமிர
புணரியுத தியில்மருகி
மட்டற்ற விந்திரிய சட்டைக்கு ரம்பையழி
பொழுதினிலும் அருள்முருக
கத்தக்கொ டுங்கிரியி னிர்த்தச்ச ரண்களைம றந்திடனே

திதிதிதிதி திதிதிதிதி
தித்தித்தி திந்திதிதி தத்தத்த தந்தததத
தெததெதெத தெததெதெத
தெத்தெத்தெ தந்ததெத திக்கட்டி கண்டிகட
ஜெகணகெண கெணஜெகுத
தெத்தித்ரி யந்திரித தக்கத்த குந்தகுந்த தந்திதீதோ

திகுடதிகு தொகுடதொகு
திக்கட்டி கண்டிகட டக்கட்ட கண்டகட
டிடிடுடுடு டிடிடுடுடு
டிக்கட்டி கண்டிகட டுட்டுட்டு டுண்டுடுடு
திகுகுதிகு திகுகுதிகு
[illegible] குக்குக்கு குங்குகுகு என்றுதாளம்

முதிர் திமிலை கரடிகையி
டக்கைக்கொ டுந்துடியு டுக்கைப்பெ ரும்பதலை
முடிவுபல மொகுமொகென
ஒத்திக்கொ டும்பிரம கத்திக்க ளும்பரவ
முகடுபுகு வெகுகொடிகள்
பக்கத்தெ ழுந்தலைய மிக்கக்க வந்தநிரை தங்கியாட

முதுகழுகு கொடிகருட
னெக்கத்தி ரண்டுவர உக்ரப்பெ ருங்குருதி
முழுகியெழு பயிரவர்ந
டித்திட்ட கண்டமுவெ டிக்க த்து ணிந்ததிர
முடுகிவரு நிசிசரரை
முட்டிச்சி ரந்திருகி வெட்டிக்க ளம்பொருத தம்பிரானே.

திருச்சிற்றம்பலம்